# நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு 2021–2022

## மானியக் கோரிக்கை எண். 34


**கே.என். நேரு**

நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர்



©

தமிழ்நாடு அரசு

2021

## 6. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்

நீரின் முக்கியத்துவத்தை தொலைநோக்குப் பார்வையுடன் உணர்ந்த மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களால், சட்டவடிவின் மூலம் 14.04.1971 அன்று ஒரு சட்டபூர்வ அமைப்பாக, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் உருவாக்கப்பட்டது. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், தமிழக மக்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கிட குடிநீர்த் திட்டங்களையும் மற்றும் கழிவுநீர் அகற்ற பாதாளச் சாக்கடைத் திட்டங்களையும் செயல்படுத்தி வருகிறது.

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் சமீபத்தில் 50 ஆண்டுகளை கடந்து வெற்றிகரமாக செயல்பட்டு வருகிறது. பொது மக்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குதல் மற்றும் கழிவுநீர் அகற்றும் பணிகளை இவ்வாரியம் கடந்த 50 ஆண்டுகளாக சிறப்பாக செயல்படுத்தி வருகிறது.

### தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய இயக்குநர்கள்

| | |
|---|---|
| **தலைவர்** | |
| 1 | அரசு கூடுதல் தலைமை செயலாளர், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை |
| **இயக்குநர்கள்** | |
| 2 | அரசு கூடுதல் தலைமை செயலாளர், பொதுப்பணித்துறை |
| 3 | அரசு முதன்மை செயலாளர், மருத்துவம் – மக்கள் நல்வாழ்வு துறை |
| 4 | அரசு முதன்மை செயலாளர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை |
| 5 | மேலாண்மை இயக்குநர், சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீர் அகற்று வாரியம் |
| 6 | பேரூராட்சிகளின் ஆணையர் |
| 7 | அரசு கூடுதல் செயலாளர், நிதித்துறை |
| 8 | நகராட்சி நிருவாக இயக்குநர் |
| 9 | ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சிகளின் இயக்குநர் |
| 10 | மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் |
| 11 | இணை மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் |
| 12 | நிதி இயக்குநர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் |
| 13 | பொறியியல் இயக்குநர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் |



தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் வேலூர், தஞ்சாவூர், கோயம்புத்தூர் மற்றும் மதுரை ஆகிய நான்கு மண்டலங்களை தலைமையிடமாகக் கொண்டு, ஒவ்வொரு மண்டலமும் ஒரு தலைமைப் பொறியாளரின் கீழ் செயல்பட்டு வருகிறது. இம்மண்டலங்களின் கீழ் உள்ள 17 வட்ட அலுவலகங்கள், 85 கோட்ட அலுவலகங்கள் மற்றும் 259 உப கோட்ட அலுவலகங்கள் கூட்டுக் குடிநீர் திட்டங்களை பராமரிப்பதுடன் சிறிய மற்றும் பெரிய கூட்டுக் குடிநீர்த்திட்டங்கள், நகர தனி குடிநீர்த்திட்டங்கள் மற்றும் பாதாள சாக்கடைத்திட்டங்களை வடிவமைத்து செயல்படுத்தி வருகின்றன.

### 6.1 தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் செயல்பாடுகள்

- தமிழ்நாட்டில் உள்ள ஊரக மற்றும் நகர்ப்புர பகுதிகளில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் பணிகளை திட்டமிடுதல் மற்றும் செயல்படுத்துதல்.
- நகர்ப்புர பகுதிகளில் பாதாள சாக்கடைத் திட்டங்களை திட்டமிடுதல் மற்றும் செயல்படுத்துதல்.

- கூட்டுக் குடிநீர்த் திட்டங்களை இயக்குதல் மற்றும் பராமரித்தல்.
- வழங்கப்படும் குடிநீரின் தரத்தினை பரிசோதித்தல் மற்றும் கண்காணித்தல்.
- நீராதாரங்களின் நீடித்த நிலைத்த தன்மையை உறுதி செய்யும் பொருட்டு கட்டமைப்புகளை ஏற்படுத்துதல்.
- ஆராய்ச்சி மற்றும் பயிற்சி அளித்தல்

## 6.2 தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் தொலைநோக்கு பார்வை (Vision)

- தனிக் குடிநீர் திட்டங்கள், கூட்டுக் குடிநீர்த் திட்டங்களை செயல்படுத்தி வீட்டு குடிநீர் குழாய் இணைப்புகள் வழங்குதல்.
- தற்போதுள்ள அனைத்து கூட்டுக் குடிநீர்த் திட்டங்களிலும் கிராமப்புறங்களில் நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு வழங்கப்பட்டு வரும் 40 லிட்டர் குடிநீரை 55 லிட்டராக உயர்த்துதல்.
- குடிநீர் திட்டங்களின் நீடித்த நிலைத்தன்மையை மேம்படுத்த நீர் செறிவூட்டு கட்டமைப்புகள் மற்றும்



தடுப்பணைகள் அமைத்தல் மற்றும் குடிநீர் வீணாவதைக் குறைத்தல்.

## 6.3 குடிநீர்த் திட்டங்கள்

### 6.3.1 இயக்கம் மற்றும் பராமரிப்பில் உள்ள கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள்

அரசாணை (நிலை) எண் 84, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 10.03.1994–ன்படி, ஒன்றுக்கும் மேற்பட்ட உள்ளாட்சி அமைப்புகள் பயன்பெறும் வகையில் செயல்படுத்தப்பட்டுள்ள கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் திறம்பட பராமரிக்கப்பட்டு மக்களுக்கு தேவையான பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

தற்போது தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் 8 மாநகராட்சிகள், 66 நகராட்சிகள், 337 பேரூராட்சிகள் மற்றும் 48,948 ஊரகக்குடியிருப்புகள் பயன்பெறும் வகையில் 558 கூட்டுக் குடிநீர்த்திட்டங்கள் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

மேற்காணும் 558 கூட்டுக் குடிநீர்த் திட்டங்களின் மூலம் சராசரியாக நாளொன்றுக்கு


1,935 மில்லியன் லிட்டர் (எம்.எல்.டி) பாதுகாக்கப்பட்ட குடிநீர் சுமார் 4.26 கோடி மக்களுக்கு கீழே அட்டவணை–6.1ல் குறிப்பிட்டுள்ளவாறு வழங்கப்பட்டு வருகிறது.

**அட்டவணை எண் 6.1**

| வ எண் | பயனாளிகள் | பயனாளிகளின் எண்ணிக்கை | திட்டத்தில் வடிவமைக்கப்பட்டபடி வழங்கப்பட வேண்டிய குடிநீரின் அளவு (எம்எல்டி) | தற்போது சராசரியாக வழங்கப்படும் குடிநீரின் அளவு (எம்எல்டி) |
|---|---|---|---|---|
| 1 | மாநகராட்சிகள் | 8 | 308 | 254.82 |
| 2 | நகராட்சிகள் | 66 | 292 | 252.20 |
| 3 | பேரூராட்சிகள் | 337 | 390 | 331.14 |
| 4 | ஊரகக்குடியிருப்புகள் | 48,948 | 1,100 | 1,041.50 |
| 5 | தொழிற்சாலைகள்/ வணிக நிறுவனங்கள் | 562 | 68 | 55.32 |
| | மொத்தம் | 49,921 | 2,158 | 1,935 (90%) |



**தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் பராமரிக்கப்படும் கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் – 558**



### 6.3.2 சிறப்புத் திட்டங்கள்

- ஐந்தாவது மாநில நிதிக் குழுவின் பரிந்துரைப்படி, வடிவமைக்கப்பட்ட காலம் முடிந்த கூட்டுக் குடிநீர்த் திட்டங்களை (Outlived CWSS) புனரமைத்து அவற்றை குறைந்தபட்சம் அடுத்த 15 ஆண்டுகளுக்கு முழுத்திறனுடன் செயல்படும் வகையில், 2017-18 முதல் 2020-21 ஆண்டு வரை, 130 கூட்டுக் குடிநீர் திட்டங்கள், ரூ.290.80 கோடி மதிப்பீட்டில் மூலதன மானிய நிதியின் கீழ் எடுத்துக் கொள்ளப்பட்டது. இவற்றுள், 117 திட்டப் பணிகள் முடிக்கப்பட்டு மீதமுள்ள 13 திட்டப் பணிகள் விரைவில் முடிக்கப்படவுள்ளன.
- கோடைக்காலங்களில் மின்தடை ஏற்படும் பட்சத்தில் தடையின்றி குடிநீர் வழங்க 365 டீசல் ஜெனரேட்டர்கள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன.
- இயற்கை பேரிடரால் கூட்டுக் குடிநீர்த்திட்டங்களின் குழாய்கள் மற்றும் இதர உபகரணங்களில் ஏற்படும் பழுதுகள் உடனுக்குடன் சரி செய்யப்பட்டு, மக்களுக்கு குடிநீர் உடனடியாக வழங்கப்படுகிறது.



### 6.3.3 செயலாக்கத்தில் உள்ள குடிநீர்த் திட்டங்கள்

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் 53 குடிநீர்த் திட்டங்கள் 172.27 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில், நாளொன்றுக்கு 1,116.63 மில்லியன் லிட்டர் குடிநீர் வழங்கும் வகையில் பல்வேறு நிலைகளில் செயலாக்கத்தில் உள்ளன. இவற்றுள் 36 திட்டங்கள் 2021-22 ஆம் ஆண்டிலும், 16 திட்டங்கள் 2022-23 ஆம் ஆண்டிலும் மற்றும் 1 திட்டம் 2023-24 ஆம் ஆண்டிலும் முடித்து மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவர இலக்கிடப்பட்டுள்ளன.

**(i) அடல் நகர்ப்புர புத்துணர்வு மற்றும் நகர்ப்புர மாற்றங்களுக்கான (அம்ரூத்) திட்டம்**

அம்ரூத் திட்டத்தின் கீழ், 9 குடிநீர்த் திட்டங்கள் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, 4 திட்டங்கள் முடிக்கப்பட்டு, மீதமுள்ள 5 குடிநீர்த் திட்டங்கள் இராஜபாளையம் நகராட்சி, நாகர்கோவில் மாநகராட்சி, வேலூர் மாநகராட்சி, கோயம்புத்தூர் மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட 8 பகுதிகள் மற்றும் கோயம்புத்தூர் மாநகராட்சிக்கான குடிநீர் அபிவிருத்தி (பில்லூர் – III)

திட்டம் ஆகியவை பல்வேறு நிலைகளில் செயலாக்கத்தில் உள்ளன.

### (ii) ஜல் ஜீவன் இயக்கம் ( Jal Jeevan Mission )

ஜல் ஜீவன் இயக்க நிதி உதவியுடன் ஈரோடு, கரூர், திருப்பத்தூர், தஞ்சாவூர், திருநெல்வேலி மற்றும் தென்காசி மாவட்டங்களைச் சார்ந்த 3 பேரூராட்சிகள் மற்றும் 2,312 ஊரக குடியிருப்புகளுக்கு ரூ.1,347.05 கோடி மதிப்பீட்டில் நாளொன்றுக்கு 65.73 மில்லியன் லிட்டர் குடிநீர் வழங்கும் வகையில் 7 கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் பல்வேறு நிலைகளில் செயலாக்கத்தில் உள்ளன. இத்திட்டங்களின் மூலம் 10.88 இலட்சம் மக்கள் பயன்பெறுவர். இத்திட்டங்களின் விவரங்கள் கீழே அட்டவணை 6.2ல் கொடுக்கப்பட்டுள்ளது.



அட்டவணை 6.2

| வ.எண் | மாவட்டம் | திட்டத்தின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (கோடியில்) | பயன்பெறும் மக்கள் தொகை (இலட்சத்தில்) | வழங்கப்பட உள்ள குடிநீர் அளவு (எம்எல்டி) |
|---|---|---|---|---|---|
| 1. | தஞ்சாவூர் | கும்பகோணம், திருப்பனந்தாள் மற்றும் திருவிடைமருதூர் ஒன்றியங்களைச் சார்ந்த 67 ஊரகக் குடியிருப்புகள் மற்றும் திருவிடைமருதூர், வேப்பத்தூர் பேரூராட்சிகளைச் சார்ந்த 2 குக்கிராமங்களுக்கான கூட்டுக் குடிநீர் திட்டம் | 117.09 | 1.02 | 5.97 |
| 2 | தென்காசி மற்றும் திருநெல்வேலி | ஆலங்குளம் மற்றும் பாப்பாக்குடி ஊராட்சி ஒன்றிங்களைச் சார்ந்த 48 ஊரகக் குடியிருப்புகள் மற்றும் முக்கூடல் பேரூராட்சியைச் சார்ந்த 1 குக்கிராமத்திற்கான கூட்டுக் குடிநீர் திட்டம் | 50.50 | 0.56 | 3.54 |

| வ. எண் | மாவட்டம் | திட்டத்தின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (கோடியில்) | பயன்பெறும் மக்கள் தொகை (இலட்சத்தில்) | வழங்கப்பட உள்ள குடிநீர் அளவு (எம்எல்டி) |
|---|---|---|---|---|---|
| 3. | திருப்பத்தூர் | திருப்பத்தூர் மாவட்டம், திருப்பத்தூர், ஜோலார்பேட்டை, நாட்றம்பள்ளி மற்றும் கந்திலி ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள 759 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டம் | 182.09 | 2.91 | 13.99 |
| 4. | கரூர் | அரவக்குறிச்சி மற்றும் கடரமத்தி ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள 756 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டம் | 440.63 | 2.09 | 16.29 |
| 5. | ஈரோடு | மொடக்குறிச்சி ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த 442 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டம் | 412.12 | 3.16 | 20.50 |
| 6. | ஈரோடு | கொடுமுடி ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த 144 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டம் | 87.68 | 0.50 | 3.13 |



| வ. எண் | மாவட்டம் | திட்டத்தின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (கோடியில்) | பயன்பெறும் மக்கள் தொகை (இலட்சத்தில்) | வழங்கப்பட உள்ள குடிநீர் அளவு (எம்எல்டி) |
|---|---|---|---|---|---|
| 7. | ஈரோடு | கோபிசெட்டிபாளையம் மற்றும் நம்பியூர் ஊராட்சி ஒன்றியங்களைச் சார்ந்த 96 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டம் | 56.94 | 0.64 | 2.31 |
| | | மொத்தம் | 1,347.05 | 10.88 | 65.73 |

இவை தவிர, ஈரோடு மற்றும் சேலம் மாவட்டங்களைச் சார்ந்த 64 ஊரகக் குடியிருப்புகளில் உள்ள 0.73 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் ரூ 26.46 கோடி மதிப்பீட்டில் 2 கூட்டுக் குடிநீர்த் திட்டங்களுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு பரிசீலனையில் உள்ளன.

(iii) கூட்டுக்குடிநீர்த் திட்டங்கள்

அனைத்து வீடுகளுக்கும் படிப்படியாக குடிநீர் இணைப்பு வழங்கும் நோக்குடன் கிராமப்புறங்களில்

நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கான குடிநீர் வழங்குதலை 40 லிட்டரிலிருந்து 55 லிட்டராக உயர்த்தவும், நகரப் பகுதிகளில் நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 135 லிட்டர் வழங்கும் வகையிலும் குடிநீர்த் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

ஒருங்கிணைந்த நகர்ப்புர வளர்ச்சித் திட்டம் (IUDM), மூலதன மானிய நிதி (CGF), உலக வங்கி நிதி உதவியுடன் செயல்படுத்தபடும் தமிழ்நாடு நீடித்த நகர்ப்புர வளர்ச்சித் திட்டம் (TNSUDP), ஜெர்மானிய மேம்பாட்டு வங்கி (KfW) உதவியுடன் செயல்படுத்தப்படும் நீடித்த நகர்ப்புர உட்கட்டமைப்பு நிதி (SMIF-TN-II-2), வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர மேம்பாட்டுக் கழகம் (HUDCO), ஆசிய வளர்ச்சி வங்கி (ADB), குறைந்தபட்ச தேவைத் திட்டம் (MNP), தேசிய வேளாண் மற்றும் கிராமப்புற வளர்ச்சி வங்கி (NABARD), ஆகிய நிறுவனங்களின் நிதியுதவியுடன் பல்வேறு குடிநீர்த்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

திருப்பூர், கரூர், திருநெல்வேலி, திண்டுக்கல், கிருஷ்ணகிரி, திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர், பெரம்பலூர், நாகப்பட்டினம், தஞ்சாவூர், கடலூர்,



நாமக்கல், சேலம், கன்னியாகுமரி, ஈரோடு, தேனி மற்றும் சிவகங்கை மாவட்டங்களைச் சார்ந்த 12 நகராட்சிகள், 49 பேரூராட்சிகள் மற்றும் 9,837 ஊரகக் குடியிருப்புகளுக்கு ரூ.6,393.99 கோடி மதிப்பீட்டில் 30 கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் பல்வேறு நிலைகளில் தற்போது செயலாக்கத்தில் உள்ளன. நாளொன்றுக்கு 538.24 மில்லியன் லிட்டர் பாதுகாப்பான குடிநீர் வழங்கும் பொருட்டு 91.17 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் இத்திட்டங்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன. இத்திட்டங்களின் விவரங்கள் கீழே அட்டவணை 6.3ல் கொடுக்கப்பட்டுள்ளது.

## அட்டவணை 6.3

| வ.எண் | மாவட்டம் | திட்டத்தின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூபாய் கோடியில்) | பயன்பெறும் மக்கள் தொகை (இலட்சத்தில்) | வழங்கப்பட உள்ள குடிநீர் அளவு ( எம்.எல்.டி) |
|---|---|---|---|---|---|
| 1. | திருச்சிராப்பள்ளி | முசிறி, தாத்தையங்கார் பேட்டை, துறையூர் மற்றும் உப்பிலியபுரம் ஊராட்சி ஒன்றியங்களைச் சார்ந்த 293 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் | 140.22 | 1.68 | 9.87 |
| 2. | சிவகங்கை | 8 பேரூராட்சிகள், 11 ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள 2452 ஊரகக் குடியிருப்புகள் மற்றும் 3 நகராட்சிகளுக்கு மொத்த ஒதுக்கீட்டுடன் கூடிய கூட்டுக் குடிநீர்த் திட்டம் | 1,752.73 | 16.11 | 86.42 |



| வ.எண் | மாவட்டம் | திட்டத்தின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூபாய் கோடியில்) | பயன்பெறும் மக்கள் தொகை (இலட்சத்தில்) | வழங்கப்பட உள்ள குடிநீர் அளவு ( எம்.எல்.டி) |
|---|---|---|---|---|---|
| 3. | தென்காசி மற்றும் விருதுநகர் | தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில், புளியங்குடி நகராட்சிகள், திருவேங்கடம் பேரூராட்சி மற்றும் விருதுநகர் மாவட்டத்தைச் சார்ந்த இராஜபாளையம், சிவகாசி, திருத்தங்கல் நகராட்சிகளுக்கான கூட்டுக் குடிநீர்த்திட்டம் | 543.20 | 6.20 | 61.98 |
| 4. | விருதுநகர் | அருப்புக்கோட்டை, சாத்தூர், மற்றும் விருதுநகர் நகராட்சிகளுக்கான கூட்டுக்குடிநீர்த் திட்டம் | 444.71 | 2.60 | 26.94 |
| 5. | கன்னியாகுமரி | இரணியல் பேரூராட்சி மற்றும் 319 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் மற்றும் பத்மனாபபுரம், காட்டாத்துறை கூட்டுக் குடிநீர் மேம்பாட்டு திட்டம் | 174.00 | 3.44 | 35.12 |

| வ.எண் | மாவட்டம் | திட்டத்தின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூபாய் கோடியில்) | பயன்பெறும் மக்கள் தொகை (இலட்சத்தில்) | வழங்கப்பட உள்ள குடிநீர் அளவு ( எம்.எல்.டி) |
|---|---|---|---|---|---|
| 6. | தேனி | கடமலைக்குண்டு–மயிலாடும்பாறை, ஆண்டிப்பட்டி மற்றும் தேனி ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள 250 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக்குடிநீர்த் திட்டம் | 162.43 | 1.78 | 10.70 |
| 7. | கடலூர் | கடலூர் மாவட்டத்திலுள்ள திட்டக்குடி, பெண்ணாடம், மங்களம்பேட்டை, வடலூர், குறிஞ்சிப்பாடி, கங்கைகொண்டான் பேரூராட்சிகள் மற்றும் மங்களூர், நல்லூர், விருத்தாசலம் ஒன்றியங்களில் உள்ள 625 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த்திட்டம் | 479.00 | 7.92 | 41.40 |



| வ.எண் | மாவட்டம் | திட்டத்தின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூபாய் கோடியில்) | பயன்பெறும் மக்கள் தொகை (இலட்சத்தில்) | வழங்கப்பட உள்ள குடிநீர் அளவு ( எம்.எல்.டி) |
|---|---|---|---|---|---|
| 8. | சேலம் | இளம்பிள்ளை, ஆட்டையாம்பட்டி, பனமரத்துப்பட்டி, மல்லூர் மற்றும் இடங்கணசாலை பேரூராட்சிகள் மற்றும் வீரபாண்டி, பனமரத்துப்பட்டி மற்றும் சேலம் ஊராட்சி ஒன்றியங்களைச் சார்ந்த 778 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் | 652.84 | 6.03 | 61.23 |
| 9. | நாமக்கல் மற்றும் சேலம் | சங்ககிரி, ஆலாம்பாளையம் மற்றும் படவீடு பேரூராட்சிகள் பள்ளிபாளையம், திருச்செங்கோடு ஊராட்சி ஒன்றியங்களைச் சார்ந்த 669 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் | 399.46 | 6.61 | 32.65 |

| வ.எண் | மாவட்டம் | திட்டத்தின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூபாய் கோடியில்) | பயன்பெறும் மக்கள் தொகை (இலட்சத்தில்) | வழங்கப்பட உள்ள குடிநீர் அளவு ( எம்.எல்.டி) |
|---|---|---|---|---|---|
| 10. | ஈரோடு மற்றும் திருப்பூர் | பெருந்துறை மற்றும் 7 பேரூராட்சிகள் மற்றும் 547 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் | 224.00 | 5.47 | 25.39 |
| 11. | கோயம்புத்தூர் மற்றும் திருப்பூர் | அன்னூர், மூப்பேரிபாளையம், அவிநாசி பேரூராட்சிகள் மற்றும் பல்லடம், திருப்பூர் ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள 155 ஊரகக் குடியிருப்புகளுக்கு மொத்த ஒதுக்கீட்டுடன் கூடிய கூட்டுக் குடிநீர்த் திட்டம் | 241.00 | 1.26 | 16.70 |
| 12. | கோயம்புத்தூர் மற்றும் திருப்பூர் | அன்னூர், அவிநாசி மற்றும் சூலூர் ஊராட்சி ஒன்றியங்களைச் சார்ந்த 708 ஊரகக் குடியிருப்புகள் மற்றும் திருப்பூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த 165 ஊரகக் குடியிருப்புகளுக்கு நீராதாரத்தை | 362.20 | 6.43 | 36.15 |



| வ.எண் | மாவட்டம் | திட்டத்தின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூபாய் கோடியில்) | பயன்பெறும் மக்கள் தொகை (இலட்சத்தில்) | வழங்கப்பட உள்ள குடிநீர் அளவு ( எம்.எல்.டி) |
|---|---|---|---|---|---|
| | | பெருக்குவதற்கு மொத்த ஒதுக்கீட்டுடன் கூடிய கூட்டுக் குடிநீர்த் திட்டம் | | | |
| 13. | திருச்சிராப்பள்ளி | தொட்டியம் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த 138 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த்திட்டம் | 49.95 | 0.64 | 3.57 |
| 14. | தஞ்சாவூர் | கும்பகோணம் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த 134 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டு குடிநீர்த் திட்டம் | 91.13 | 0.97 | 5.45 |
| 15. | நாகப்பட்டிணம் | 893 குடியிருப்புகளுக் கான கூட்டுக் குடிநீர் திட்டத்திற்கு கூடுதல் நீராதாரம் ஏற்படுத்துவதற்கான திட்டம் | 42.46 | 7.03 | 14.93 |
| 16. | பெரம்பலூர் | வேப்பூர் ஒன்றியத்தில் உள்ள 73 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த்திட்டம் | 22.84 | 0.87 | 4.05 |

| வ.எண் | மாவட்டம் | திட்டத்தின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூபாய் கோடியில்) | பயன்பெறும் மக்கள் தொகை (இலட்சத்தில்) | வழங்கப்பட உள்ள குடிநீர் அளவு ( எம்.எல்.டி) |
|---|---|---|---|---|---|
| 17. | திருநெல்வேலி | கீழப்பாவூர் பேரூராட்சி, பாப்பாக்குடி, கடையம் மற்றும் கீழப்பாவூர் ஊராட்சி ஒன்றியங்களைச் சார்ந்த 163 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக்குடிநீர்த் திட்டம் | 46.55 | 2.00 | 9.27 |
| 18. | திருநெல்வேலி | மானூர் மற்றும் பாளையங்கோட்டை ஊராட்சி ஒன்றியங்களைச் சார்ந்த 170 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக்குடிநீர்த் திட்டம் | 32.40 | 1.45 | 6.18 |
| 19. | கிருஷ்ணகிரி | ஊத்தங்கரை பேரூராட்சி மற்றும் ஊத்தங்கரை ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த 50 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த்திட்டம் | 28.24 | 0.63 | 2.35 |
| 20. | கிருஷ்ணகிரி | பர்கூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த சிகரலப்பள்ளி மற்றும் | 31.82 | 0.41 | 1.46 |



| வ.எண் | மாவட்டம் | திட்டத்தின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூபாய் கோடியில்) | பயன்பெறும் மக்கள் தொகை (இலட்சத்தில்) | வழங்கப்பட உள்ள குடிநீர் அளவு ( எம்.எல்.டி) |
|---|---|---|---|---|---|
| | | 143 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் | | | |
| 21. | கிருஷ்ணகிரி | ஓசூர் ஊராட்சி ஒன்றியத்தை சார்ந்த நாகொண்டபள்ளி மற்றும் 27 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் | 8.10 | 0.20 | 0.55 |
| 22. | கிருஷ்ணகிரி | கெலமங்கலம் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த ராயகோட்டை மற்றும் 28 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம். | 8.46 | 0.25 | 0.65 |
| 23. | கிருஷ்ணகிரி | கிருஷ்ணகிரி ஊராட்சி ஒன்றியத்தை சார்ந்த வெலகலஹள்ளி மற்றும் 39 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த்திட்டம் | 9.90 | 0.12 | 0.41 |

| வ.எண் | மாவட்டம் | திட்டத்தின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூபாய் கோடியில்) | பயன்பெறும் மக்கள் தொகை (இலட்சத்தில்) | வழங்கப்பட உள்ள குடிநீர் அளவு ( எம்.எல்.டி) |
|---|---|---|---|---|---|
| 24. | கிருஷ்ணகிரி | வேப்பனப்பள்ளி ஒன்றியத்தை சார்ந்த என்னேகொள்ளு மற்றும் 122 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த்திட்டம் | 31.00 | 0.54 | 2.44 |
| 25. | கடலூர் | பண்ருட்டி மற்றும் அண்ணாகிராமம் ஒன்றியங்களைச் சார்ந்த 35 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம். | 9.21 | 0.48 | 2.20 |
| 26. | கரூர் | தாந்தோணி ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த 274 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் | 81.41 | 0.86 | 5.31 |
| 27. | திருப்பூர் | 5 பேரூராட்சிகள், மடத்துக்குளம் மற்றும் உடுமலைப்பேட்டை ஊராட்சி ஒன்றியங்களைச் சார்ந்த 318 ஊரகக் | 85.75 | 4.07 | 8.83 |



| வ.எண் | மாவட்டம் | திட்டத்தின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூபாய் கோடியில்) | பயன்பெறும் மக்கள் தொகை (இலட்சத்தில்) | வழங்கப்பட உள்ள குடிநீர் அளவு ( எம்.எல்.டி) |
|---|---|---|---|---|---|
| | | குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் | | | |
| 28. | திருப்பூர் | பல்லடம் மற்றும் திருப்பூர் ஊராட்சி ஒன்றியங்களைச் சார்ந்த 155 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் | 99.24 | 2.94 | 15.42 |
| 29. | கோயம்புத்தூர் | பொள்ளாச்சி தெற்கு பொள்ளாச்சி வடக்கு மற்றும் கிணத்துக்கடவு ஊராட்சி ஒன்றியங்களைச் சார்ந்த 212 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டம் | 69.31 | 0.85 | 4.92 |
| 30. | திருப்பூர் | திருப்பூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த 10 ஊராட்சிகளிலுள்ள 165 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் | 70.43 | 1.34 | 5.70 |
| | | மொத்தம் | 6,393.99 | 91.17 | 538.24 |

### (iv) நகர்ப்புர தனிக் குடிநீர் திட்டங்கள்

மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளுக்கான நகர்ப்புர தனிக் குடிநீர்த் திட்டப் பணிகளை நடைமுறைப்படுத்தும் அமைப்பாக தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் செயலாற்றி வருகிறது. திட்டங்கள் முடிந்தவுடன் அவை பராமரிப்புக்காக அந்தந்த நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளிடம் ஒப்படைக்கப்படுகின்றன.

தற்போது, திருநெல்வேலி, தேனி, மதுரை, கன்னியாகுமரி, திண்டுக்கல், திருவள்ளூர், நாமக்கல் மற்றும் ஈரோடு மாவட்டங்களைச் சார்ந்த 1 மாநகராட்சி, 6 நகராட்சிகள் மற்றும் 3 பேரூராட்சிகளுக்கு ரூ. 776.29 கோடி மதிப்பீட்டில் 11 குடிநீர் அபிவிருத்தி திட்டங்கள் பல்வேறு நிலைகளில் செயலாக்கத்தில் உள்ளன. இத்திட்டப் பணிகள் முடிந்ததும் 12.96 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் 124.02 எம்.எல்.டி குடிநீர் வழங்கப்படும். இத்திட்டங்களின் விவரங்கள் கீழே அட்டவணை 6.4ல் கொடுக்கப்பட்டுள்ளது.



அட்டவணை 6.4

| வ எண் | மாவட்டம் | திட்டத்தின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (கோடியில்) | பயன்பெறும் மக்கள் தொகை (இலட்சத்தில்) | வழங்கப்பட உள்ள குடிநீர் அளவு (எம்எல்டி) |
|---|---|---|---|---|---|
| 1 | திருநெல்வேலி | திருநெல்வேலி மாநகராட்சி குடிநீர் அபிவிருத்தி திட்டம் | 230.00 | 6.88 | 50.00 |
| 2 | தேனி | போடிநாயக்கனூர் நகராட்சி குடிநீர் அபிவிருத்தி திட்டம் | 76.15 | 1.00 | 15.82 |
| 3 | தேனி | போடிநாயக்கனூர் நகராட்சிக்கென தனிக் குடிநீர் அபிவிருத்தி திட்டம் | 30.00 | | |
| 4 | தேனி | தென்கரை பேரூராட்சி குடிநீர் அபிவிருத்தி திட்டம் | 9.54 | 0.28 | 2.00 |
| 5 | மதுரை | உசிலம்பட்டி நகராட்சி குடிநீர் அபிவிருத்தி திட்டம் | 73.03 | 0.64 | 9.98 |
| 6 | மதுரை | ஆனையூர் நகராட்சி குடிநீர் அபிவிருத்தி திட்டம் | 8.97 | 0.72 | 5.40 |

| வ எண் | மாவட்டம் | திட்டத்தின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (கோடியில்) | பயன்பெறும் மக்கள் தொகை (இலட்சத்தில்) | வழங்கப்பட உள்ள குடிநீர் அளவு (எம்எல்டி) |
|---|---|---|---|---|---|
| 7. | கன்னியாகுமரி | குழித்துறை நகராட்சி குடிநீர் அபிவிருத்தி திட்டம் | 30.94 | 0.31 | 4.83 |
| 8. | திண்டுக்கல் | பாலசமுத்திரம் பேரூராட்சி குடிநீர் அபிவிருத்தி திட்டம் | 9.62 | 0.18 | 1.92 |
| 9. | திருவள்ளூர் | திருத்தணி நகராட்சி குடிநீர் அபிவிருத்தி திட்டம் | 109.68 | 0.85 | 9.44 |
| 10. | நாமக்கல் | நாமக்கல் நகராட்சி குடிநீர் அபிவிருத்தி திட்டம் | 185.24 | 1.84 | 22.09 |
| 11. | ஈரோடு | சிவகிரி பேரூராட்சி குடிநீர் அபிவிருத்தி திட்டம் | 13.12 | 0.26 | 2.54 |
| | மொத்தம் | | 776.29 | 12.96 | 124.02 |



## 6.4 பாதாள சாக்கடைத் திட்டங்கள்

பாதாள சாக்கடைத் திட்டங்கள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால், ஒன்றிய அரசின் அம்ருத் திட்ட நிதியுதவி (AMRUT), ஒருங்கிணைந்த நகர்ப்புர வளர்ச்சித் திட்டம் (IUDM), மூலதன மானிய நிதி (CGF), ஜெர்மானிய மேம்பாட்டு வங்கி (KfW) உதவியுடன் கூடிய நீடித்த நகர்ப்புர உட்கட்டமைப்பு நிதி (SMIF-TN-II-2), வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர மேம்பாட்டுக் கழகம் (HUDCO), தமிழ்நாடு நகர்ப்புர வளர்ச்சித் திட்டம்-III (TNUDP-III), தமிழ்நாடு நகர்ப்புர வளர்ச்சி நிதி (TNUDF), ஆகிய நிறுவனங்களின் நிதி ஆதாரங்களைக் கொண்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

### 6.4.1 அம்ருத்

நாகப்பட்டினம் மாவட்டம், வேளாங்கண்ணி பேரூராட்சிக்கான பாதாள சாக்கடைத்திட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது. கோயம்புத்தூர் மாநகராட்சி மற்றும் 3 நகராட்சிகளில் உள்ள 9.63 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் 4 பாதாள சாக்கடைத் திட்டங்கள் ரூ. 1,082.49 கோடி மதிப்பீட்டில் பல்வேறு நிலைகளில் செயலாக்கத்தில் உள்ளன. அவற்றின் விவரங்கள் கீழே அட்டவணை 6.5ல் கொடுக்கப்பட்டுள்ளது.

அட்டவணை 6.5

| வ. எண். | மாவட்டம் | நகர்ப்புர உள்ளாட்சி அமைப்பின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ.கோடியில்) | பயன்பெறும் மக்கள் தொகை (இலட்சத்தில்) | சுத்திகரிக்கப்பட உள்ள கழிவு நீரின் அளவு (எம்எல்டி) |
|---|---|---|---|---|---|
| 1. | இராமநாதபுரம் | இராமேஸ்வரம் நகராட்சி | 57.60 | 0.43 | 4.08 |
| 2. | திருப்பத்தூர் | ஆம்பூர் நகராட்சி | 182.55 | 1.83 | 16.71 |
| 3. | விருதுநகர் | இராஜபாளையம் நகராட்சி | 251.20 | 2.20 | 21.85 |
| 4. | கோயம்புத்தூர் | கோயம்புத்தூர் மாநகராட்சியில் இணைக்கப்பட்ட குறிச்சி மற்றும் குனியமுத்தூர் பகுதிகளுக்கான பாதாள சாக்கடைத் திட்டம் | 591.14 | 5.17 | 30.53 |
| | | மொத்தம் | 1,082.49 | 9.63 | 73.17 |

### 6.4.2 இதர பாதாள சாக்கடைத் திட்டங்கள்

2 மாநகராட்சிகள், 6 நகராட்சிகள் மற்றும் 7 பேரூராட்சிகள் பயன்பெறும் வகையில் ரூ.1,479.32 கோடி மதிப்பீட்டில் 15 பாதாள சாக்கடைத்திட்டங்கள் பல்வேறு நிலைகளில் செயலாக்கத்தில் உள்ளன. இத்திட்டங்கள் முடிவுற்ற



பின், 11.50 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில், நாளொன்றுக்கு 124.73 மில்லியன் லிட்டர் கழிவுநீர் சேகரிக்கப்பட்டு நிர்ணயிக்கப்பட்ட தரத்திற்கு சுத்திகரிப்பு செய்யப்படும். அவற்றின் விவரங்கள் கீழே அட்டவணை 6.6–ல் கொடுக்கப்பட்டுள்ளன.

அட்டவணை 6.6

| வ. எண். | மாவட்டம் | உள்ளாட்சி அமைப்பின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ.கோடியில்) | பயன்பெறும் மக்கள் தொகை (இலட்சத்தில்) | சுத்திகரிக்கப்பட உள்ள கழிவு நீரின் அளவு (எம்.எல்.டி.) |
|---|---|---|---|---|---|
| 1. | திருச்சிராப்பள்ளி | மணச்சநல்லூர் பேரூராட்சி | 30.11 | 0.36 | 4.16 |
| 2. | திருச்சிராப்பள்ளி | எஸ்.கண்ணனூர் பேரூராட்சி | 19.45 | 0.18 | 2.25 |
| 3. | தஞ்சாவூர் | வல்லம் பேரூராட்சி | 34.51 | 0.20 | 2.35 |
| 4. | சிவகங்கை | காரைக்குடி நகராட்சி | 140.53 | 1.39 | 16.00 |
| 5. | கன்னியாகுமரி | நாகர்கோவில் மாநகராட்சி | 120.01 | 1.54 | 17.66 |
| 6. | தூத்துக்குடி | தூத்துக்குடி மாநகராட்சி | 95.00 | 2.65 | 23.85 |
| 7. | விருதுநகர் | சாத்தூர் நகராட்சி | 48.39 | 0.36 | 4.63 |
| 8. | தேனி | மேலசொக்கநாதபுரம் பேரூராட்சி | 41.72 | 0.22 | 1.90 |
| 9. | விழுப்புரம் | விழுப்புரம் நகராட்சி (பகுதி) | 263.00 | 0.60 | 6.91 |
| 10. | விழுப்புரம் | திண்டிவனம் நகராட்சி | 268.00 | 1.00 | 11.44 |
| 11. | திருவள்ளூர் | பொன்னேரி பேரூராட்சி | 54.78 | 0.57 | 6.52 |
| 12. | செங்கல்பட்டு | திருப்போரூர் பேரூராட்சி | 42.00 | 0.33 | 4.02 |
| 13. | ஈரோடு | பெருந்துறை பேரூராட்சி | 51.50 | 0.33 | 3.14 |

| வ. எண். | மாவட்டம் | உள்ளாட்சி அமைப்பின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ.கோடியில்) | பயன்பெறும் மக்கள் தொகை (இலட்சத்தில்) | சுத்திகரிக்கப்பட உள்ள கழிவு நீரின் அளவு (எம்.எல்.டி) |
|---|---|---|---|---|---|
| 14. | கோயம்புத்தூர் | மேட்டுப்பாளையம் நகராட்சி | 100.10 | 0.77 | 8.65 |
| 15. | கோயம்புத்தூர் | பொள்ளாச்சி நகராட்சி | 170.22 | 1.00 | 11.25 |
| | | மொத்தம் | 1,479.32 | 11.50 | 124.73 |

## 6.5 திட்ட மதிப்பீடு தயாரித்தல் மற்றும் புதிய திட்டங்களுக்கு ஆய்வு மேற்கொள்ளுதல்

### 6.5.1 குடிநீர்த் திட்டங்கள்

2020-21-ம் ஆண்டில் விழுப்புரம் மற்றும் நாமக்கல் மாவட்டங்களிலுள்ள 3 நகராட்சிகள், 10 பேரூராட்சிகள் மற்றும் 979 ஊரகக் குடியிருப்புகளுக்கு ரூ.2,435.52 கோடி மதிப்பீட்டில் 2 கூட்டுக் குடிநீர்த் திட்டங்களுக்கு நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டது. தற்போது நிதி ஆதாரம் இறுதி செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதன் விவரங்கள் கீழே அட்டவணை 6.7ல் கொடுக்கப்பட்டுள்ளது.



**அட்டவணை 6.7**

| வ.எண் | மாவட்டம் | திட்டத்தின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (கோடியில்) | பயன் பெறும் மக்கள் தொகை (இலட்சத்தில்) | குடிநீர் அளவு (எம்.எல்.டி) |
|---|---|---|---|---|---|
| 1. | நாமக்கல் | நாமக்கல் மாவட்டம் ராசிபுரம் நகராட்சி, 8 பேரூராட்சிகள் மற்றும் ராசிபுரம், வெண்ணந்தூர், நாமகிரிப்பேட்டை, புதுச்சத்திரம் ஒன்றியங்களில் உள்ள 523 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டம் | 932.80 | 4.36 | 86.04 |
| 2. | விழுப்புரம் | விழுப்புரம் மாவட்டம் மரக்காணம் அருகில் கூனிமேட்டில் நாளொன்றுக்கு 60 மில்லியன் லிட்டர் கடல் நீரை குடிநீராக்கும் நிலையம் அமைத்து விழுப்புரம் மற்றும் திண்டிவனம் நகராட்சிகள், விக்கிரவாண்டி, மரக்காணம், | 1502.72 | 7.33 | 60.00 |

| வ.எண் | மாவட்டம் | திட்டத்தின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (கோடியில்) | பயன் பெறும் மக்கள் தொகை (இலட்சத்தில்) | குடிநீர் அளவு (எம்.எல்.டி) |
|---|---|---|---|---|---|
| | | பேரூராட்சிகள் மற்றும் 456 ஊரகக் குடியிருப்புகளுக்கு குடிநீர் வழங்கும் கூட்டுக் குடிநீர்த்திட்டம் | | | |

இராமநாதபுரம், தூத்துக்குடி, திண்டுக்கல் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களிலுள்ள 1 மாநகராட்சி, 2 நகராட்சிகள், 11 பேரூராட்சிகள் மற்றும் 1,796 ஊரகக் குடியிருப்புகள் பயன்பெறும் வகையில் ரூ.2,629.41 கோடி மதிப்பீட்டிலான 3 கூட்டுக் குடிநீர்த் திட்டங்களுக்கு விரிவான திட்ட மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டுள்ளன.

திருவாரூர், திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவண்ணாமலை, வேலூர், திருப்பத்தூர், இராணிப்பேட்டை, கிருஷ்ணகிரி, திண்டுக்கல், திருப்பூர், மதுரை, திருநெல்வேலி, நாமக்கல் மற்றும் கள்ளக்குறிச்சி ஆகிய மாவட்டங்களிலுள்ள 6 நகராட்சிகள், 33 பேரூராட்சிகள் மற்றும் 11,519 ஊரகக்



குடியிருப்புகள் பயன்பெறும் வகையில் 12 கூட்டுக் குடிநீர்த் திட்டங்களுக்கு விரிவான திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டு வருகின்றன.

### 6.5.2 பாதாள சாக்கடைத் திட்டங்கள்

நகராட்சி நிருவாக இயக்குநர் மற்றும் பேரூராட்சிகளின் ஆணையர் ஆகியோரால் முன்னுரிமை அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படும் நகரங்களுக்கு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் பாதாள சாக்கடை திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன.

செங்கல்பட்டு, கிருஷ்ணகிரி மற்றும் கோயம்புத்தூர் மாவட்டங்களைச் சார்ந்த 2 மாநகராட்சிகள் மற்றும் 1 நகராட்சி பயன் பெறும் வகையில் ரூ.920.14 கோடி மதிப்பீட்டில் 3 பாதாள சாக்கடைத் திட்டங்களுக்கு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டுள்ளன.

தூத்துக்குடி மாநகராட்சிக்கு (பகுதி) பாதாள சாக்கடைத் திட்டம் செயல்படுத்த விரிவான திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டு வருகிறது.

## 6.6 ஆராய்ச்சி, வடிவமைப்பு, பயிற்சி மற்றும் திட்ட மேலாண்மை மையம்

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் பராமரிக்கப்பட்டு வரும் கூட்டுக் குடிநீர்த் திட்டங்களின் செயல்பாடுகள் மற்றும் பராமரிப்பு செலவினத்தை குறைக்க கீழ்க்காணும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

- 2020-21-ல் 5 குதிரைத்திறன் வரை உள்ள 100 மின்விசை இறைப்பான்களை தானியக்கம் செய்து, அதன் மூலம் வருடாந்திர பராமரிப்பு செலவில் ரூ.174.50 இலட்சம் சேமிக்கப்பட்டுள்ளது.
- மேலும் 500 மின்விசை இறைப்பான்களை ரூ.10.00 கோடி மதிப்பீட்டில் தானியக்கம் செய்து வருடாந்திர பராமரிப்பு செலவினத்தில் சுமார் ரூ.9.38 கோடி சேமிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.
- பில்லூர்-I கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் வெள்ளியங்காட்டில் உள்ள நீர் சுத்திகரிப்பு நிலைய மின் விசை இறைப்பான்களின் செயல்திறனை அதிகரிக்க ஒரு Energy Services Company (ESCO) மூலம் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருகிறது.



- தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் பராமரிக்கப்பட்டு வரும் இரண்டு கூட்டுக் குடிநீர் திட்டங்களின் செயல்பாடுகளை இணையதளம் வாயிலாக கண்காணிக்க, இணைய உலகம் (Internet of Things) வகையிலான உணரிகளை (Sensor) பொருத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**பயிற்சி செயல்பாடுகள்**

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் கீழ் சென்னை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, மதுரை ஆகிய நான்கு இடங்களில் பயிற்சி மையங்கள் உள்ளன.

இந்த மையங்களின் மூலம் வாரியத்தில் உள்ள தொழில்நுட்ப மற்றும் இதர பிரிவு அலுவலர்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளுக்கும் பயிற்சி மற்றும் திறன் மேம்பாட்டு வகுப்புகள் நடத்தப்படுகின்றன.

2020-21 ஆம் ஆண்டில் 200 பணியாளர்கள் பயன்பெறும் வகையில் இரண்டு பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டுள்ளன.

2021-22 ஆம் ஆண்டில் ஜல் ஜீவன் இயக்கத்தின் நிதியுதவியின் கீழ் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திலுள்ள களப்பொறியாளர்கள், நீர் ஆய்வாளர்கள், நீர் புவியியலாளர்கள் மற்றும் ஊரக

வளர்ச்சித்துறை களப்பொறியாளர்கள் 1,100 நபர்கள் பயன்பெறும் வகையில் பல்வேறு பயிற்சிகள் அளிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## 6.7. வாரியத்தின் தர கட்டுமான ஆய்வகங்கள்

தர கட்டுமான ஆய்வகங்கள் மதுரை, திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர் மற்றும் திண்டிவனம் ஆகிய நான்கு இடங்களில் செயல்படுகின்றன. இதில், மதுரை மற்றும் கோயம்புத்தூர் ஆய்வகங்கள் NABL சான்று பெற்றுள்ளன.

இந்த ஆய்வகங்களில், கீழ்க்கண்ட கட்டுமான பொருட்கள் பரிசோதிக்கப்படுகின்றன.

- குழாய்கள் – பாலி வினைல் குளோரைடு (PVC), உயர் அடர்த்தி பாலி எத்தலின் (HDPE), துத்தநாகம் பூசப்பட்ட இரும்பு (GI), நெகிழ் இரும்பு (DI) மற்றும் சுடுமண் (Stoneware)
- வடிவமைப்பு கான்கீரீட் கலவை (concrete design mix)
- கட்டுமான பொருட்களான சிமெண்ட், வலுவூட்டும் இரும்பு கம்பி, மணல், ஜல்லி, செங்கல், கான்கிரீட்.



- வடிகட்டி மணல், ஹாலோ பிளாக்குகள், பேவர் பிளாக்குகள்
- மின் கடத்திகள் (Electric Cables)

2020-21 ஆம் நிதியாண்டில், 10,669 மாதிரிகள் பரிசோதிக்கப்பட்டன.

2021-22 ஆம் நிதியாண்டில், சுமார் 11,000 மாதிரிகள் பரிசோதிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

## 6.8 நிலநீர் பிரிவின் செயல்பாடுகள்

பல்வேறு குடிநீர் திட்டங்களுக்கு நிலையான நீர் ஆதாரங்கள் புவி இயற்பியல் ஆய்வு (Geo Physical Survey Method) முறையில் அறிவியல் பூர்வமாக கண்டறியப்படுகிறது.

புவியியல் தகவல் அமைப்பு (GIS) மற்றும் தொலை உணர்வு தொழில் நுட்பத்தின் மூலம், ஒன்றிய அளவில், நீர் ஆதார வரைபடம் (ATLAS) தயார் செய்யப்பட்டு அவற்றின் துணை கொண்டு நீடித்த நிலைத்தன்மையுடைய நீராதாரங்களை கண்டறிய உள்ளாட்சி அமைப்புகளுக்கு பகிரப்பட்டுள்ளது.

மேலும் நீர் மேலாண்மை மற்றும் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகளை உருவாக்க பொதுமக்கள்

மற்றும் அரசு நிறுவனங்களுக்கு தொழில் நுட்ப ஆலோசனைகள் வழங்கப்படுகிறது.

2020-21 ஆம் நிதியாண்டில், 1,188 புவி இயற்பியல் ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு ரூ.35.47 இலட்சம் வருவாய் ஈட்டப்பட்டது.

### 6.9 மழை நீர் சேகரிப்பு கட்டமைப்புகள்

நகர்ப்புரங்களில் வெவ்வேறு வகையான மழைநீர் சேகரிப்பு அமைப்பு முறைகளை பயன்படுத்தி நிலையான நீர் பாதுகாப்பினை உறுதி செய்யும் பொருட்டு ரூ.20 கோடி மதிப்பீட்டில், நீடித்த நிலையான குடிநீர் பாதுகாப்பு இயக்கத்தை (SuWaSeM) தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தினை செயல்படுத்த தேவையான தொழில்நுட்ப ஆலோசனைகளை வழங்கி, ஒருங்கிணைப்பு முகமையாக தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் செயல்படுகிறது. மேலும், இத்திட்டம் நகராட்சி நிருவாக இயக்குநரகம் மற்றும் பேரூராட்சிகளின் ஆணையரகம் ஆகிய துறைகளின் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.



துறையின் தொலை நோக்கு பார்வையின்படி நகர பகுதிகளில் நீர்நிலைகளை சீரமைத்து, நீர் செறிவூட்டும் கட்டமைப்புகள் மற்றும் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகள் அமைத்து நீர்மீள் நெகிழ்திறன் ( Water Resilient) நகரங்களாக உருவாக்க தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் தொழில்நுட்ப ஆலோசனைகளை வழங்கி வருகிறது.

### 6.10 குடிநீரின் தர பரிசோதனை மற்றும் கண்காணிப்பு

பொதுமக்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குதலை உறுதி செய்யும் பொருட்டு, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மாநில அளவிலான ஒரு குடிநீர் பரிசோதனைக் கூடம், 31 மாவட்ட, 56 துணை மாவட்ட மற்றும் 25 ஒன்றிய அளவிலான குடிநீர் பரிசோதனை கூடங்களை அமைத்துள்ளது. இதன் வாயிலாக ஊரக மற்றும் நகர்ப்புர பகுதிகளில் வழங்கப்படும் குடிநீரில் இரசாயனம் மற்றும் நுண்கிருமிகள் உள்ளதா என்பது உள்ளிட்ட அடிப்படை தரக்காரணிகளுக்கான பரிசோதனைகள் (Basic quality parameters) மற்றும் குடிநீர் தரக் கண்காணிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் கீழ் உள்ள

மாநில அளவிலான குடிநீர் தர பரிசோதனைக் கூடம் NABL Accreditation தரச்சான்றிதழ் பெற்று மாநில அளவிலான வழிகாட்டி பரிசோதனைக் கூடமாக ஒன்றிய அரசினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

2020-21 ஆம் நிதியாண்டில் 3,45,550 குடிநீர் மாதிரிகள் பரிசோதிக்கப்பட்டன. குடிநீர் மாதிரிகள் பரிசோதனை செய்வதன் மூலமும், கள நீர் பரிசோதனை பெட்டிகளின் விற்பனை மூலமும் ரூ.7.38 இலட்சம் வருவாய் ஈட்டப்பட்டது.

மேலும் ஜல் ஜீவன் இயக்கம் மற்றும் மாநில அரசின் நிதி உதவியுடன் 2021-22 ஆம் ஆண்டில், 4,50,000 குடிநீர் மாதிரிகள், மாநில மற்றும் மாவட்ட அளவிலான பரிசோதனைக் கூடங்களில் தர பரிசோதனை செய்யப்படவுள்ளன. மேலும் 63,000 அடித்தட்டு நிலை பணியாளர்கள், ஊராட்சி செயலர்களுக்கு நீர் பரிசோதனை பெட்டிகள் உபயோகத்திற்கான பயிற்சி அளிக்கப்பட உள்ளது.

மேலும் ஜல் ஜீவன் இயக்கத்தின் கீழ் 31 மாவட்ட அளவிலான குடிநீர் பரிசோதனைக் கூடங்களுக்கு NABL Accreditation சான்றும் தேசிய அங்கீகாரமும், 56 துணை மாவட்ட மற்றும்



25 வட்டார அளவிலான குடிநீர் பரிசோதனை கூடங்களுக்கு NABL அங்கீகாரம் பெறுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## 6.11 நிதி நிலை

2020-21 ஆம் ஆண்டுக்கான (தற்காலிக) திருத்த மதிப்பீட்டின்படி மொத்த வருவாய் செலவு ரூ.1,332.35 கோடி ஆகும். இதே போல் மொத்த வருமானம் ரூ.942.18 கோடி ஆகும்.

2018-19 முதல் 2020-21 வரையுள்ள ஆண்டுகளுக்கான வருமானம், செலவினம், உபரி/பற்றாக்குறை மற்றும் ஒட்டுமொத்த பற்றாக்குறை குறித்த விவரங்கள் கீழே அட்டவணை 6.8ல் தரப்பட்டுள்ளன.

அட்டவணை 6.8 (ரூ.கோடியில்)

| வ எண் | விவரங்கள் | 2018-19 ஆம் நிதியாண்டு | 2019-20 ஆம் நிதியாண்டு | *2020-21 ஆம் நிதியாண்டு (தோராயமாக) |
|---|---|---|---|---|
| I. | வருவாய் வருமானம்: | | | |
| 1 | நூற்றுவீதக் கட்டணம் (centage) | 167.57 | 182.47 | 199.02 |
| 2 | குடிநீர்க் கட்டணம் | 613.12 | 649.52 | 543.12 |
| 3 | இதர வருமானம் | 116.85 | 81.94 | 43.45 |
| 4 | மானியங்கள் | 571.96 | 449.26 | 156.59 |

| | | | | |
|---|---|---|---|---|
| | **மொத்தம்** | **1,469.50** | **1,363.19** | **942.18** |
| **II.** | **வருவாய் செலவினம்:** | | | |
| 1 | சம்பளம் | 136.03 | 127.51 | 108.11 |
| 2 | ஓய்வூதியர்களுக்கான ஓய்வூதிய பலன்கள் | 357.09 | 412.07 | 309.70 |
| 3 | கூட்டுக் குடிநீர்த் திட்ட பராமரிப்புச் செலவுகள் | 911.93 | 924.74 | 896.20 |
| 4 | இதர செலவுகள் | 26.19 | 25.61 | 18.34 |
| | **மொத்தம்** | **1,431.24** | **1,489.93** | **1,332.35** |
| | உபரி / பற்றாக்குறை | 38.26 | (-)126.74 | (-)390.17 |
| | ஒட்டுமொத்த பற்றாக்குறை | **2,183.89** | **2,310.63** | **2,700.80** |

*2020-21 ஆம் ஆண்டிற்கான கணக்குகள் இன்னும் இறுதி செய்யப்படவில்லை

31.03.2021 அன்று கொடுக்கப்படவேண்டிய, பெறப்படவேண்டிய, மற்றும் கடன் நிலுவைத் தொகை விவரங்கள் கீழே அட்டவணை 6.9ல் தரப்பட்டுள்ளன:

**அட்டவணை 6.9**

(ரூ. கோடியில்)

| வ எண் | விவரங்கள் | 31.03.2021 அன்று தொகை (தோராயமாக) |
|---|---|---|
| **I.** | **கொடுக்கப்படவேண்டியவை:** | |
| 1 | தமிழ்நாடு மின் பகிர்மானக் கழகம் (TANGEDCO) | 1,518.59 |



| | | |
|---|---|---|
| 2 | ஓய்வூதியர்களுக்கான ஓய்வூதிய பலன்கள் | 182.40 |
| 3 | கூட்டுக் குடிநீர்த் திட்ட இயக்கம் மற்றும் பராமரிப்பு ஒப்பந்ததாரர்கள் | 271.17 |
| 4 | ஒப்பந்ததாரர்களுக்கு கொடுக்கவேண்டியவை (திட்ட நிதி) | 522.46 |
| 5 | பிற இனங்கள் | 395.64 |
| | **மொத்தம்** | **2,890.26*** |
| **II** | **பெறப்படவேண்டியவை:** (குடிநீர் கட்டணம்) | |
| 1 | மாநகராட்சிகள் | 261.05 |
| 2 | நகராட்சிகள் | 10.09 |
| 3 | பேரூராட்சிகள் | 10.82 |
| 4 | கிராம ஊராட்சிகள் | 202.14 |
| 5 | தனியார் பயனாளிகள் | 121.43 |
| | **மொத்தம்** | **605.53*** |
| III | **ஆயுள் காப்பீட்டு கழகத்திற்கு செலுத்த வேண்டிய கடன் நிலுவைத் தொகை:** | |
| | a) அசல் | 107.23 |
| | b) வட்டி | 1.59 |
| | **மொத்தம்** | **108.82*** |
| | *தணிக்கை செய்யப்படவேண்டியது | |